22nd November 1963]

பூமிதான இயக்கம்

* 450 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பூமிதான இயக்கத்திற்கு நம் மாநிலத்தில் 1962-ம் ஆண்டு முடிய கிடைத்துள்ள நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(இ) தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் உள்ள பகுதிகளில் இந்த நிலத்தை சாகுபடி செய்து வருவோர்க்கு அரசாங்கக் கடன் உதவி மற்றச் சலுகைகள் வழங்கப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) நன்செய் 3,247 ஏகரா, புன்செய் 45,527 ஏகரா.

(இ) ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த நிலங்கள் எல்லாம் சாகுபடியில் இருக்கிறதா அல்லது தரிசாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. பூ. கக்கன்: பெரும்பகுதி சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ம. அம்பிகாபதி: அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களேயும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கத்திற்குரிய புறம்போக்கு நிலங்களாக அவை இருந்தால் அதையும் அவர்கள் கேட்டால் உபயோகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

சாலேகளின் பெயரை மாற்றுதல்

* 451 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னே நகாத்தில் உள்ள சில சாலேகளுக்கு புதிய பெயர்கள் கொடுக்க வேண்டுமென்று கோரி சென்னே நகாசபை தீர்மானம் அரசினருக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசினர் என்ன நடவடிக்கை எடுத்தனர்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் சென்னே மாநகராட்சி ஆணேயாளருடன் கடிதத் தொடர்பில் உள்ளது.

திரு. செ. மாதவன்: தலேவர் அவர்களே, யார் யாருடைய பெயரை எந்த எந்த ரோடுகளுக்கு வைக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனே வந்ததா? அதுபற்றி அரசாங்கம் ஏதாவது முடிவு கூறியிருக்கிறதா?

[22nd November 1968

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஒரு தனிப்பட்ட இடத்திற்கு மட்டும் அல்ல. இவ்வாறு பெயர் மாற்றவேண்டுமென்று 17 தெருக்கள் குறிப்பிடப்பட்டு, பதினேழு பெயர்களை அனுப்பியிருந்தார்கள். இது கார்ப்பரேஷன் கவுன்சில் செய்து அனுப்பிய தீர்மானம். அவற்றில் சில மாறுதல்களைச் செய்யலாமா, இதுபற்றி மீட்டும் பரிசீலனை செய்து அனுப்புங்கள் என்று அரசாங்கம் அதை அவர்களுக்கே அனுப்பியிருக்கிறது. இப்போது முடிவாக அவர்கள் பதில் வரும் வரையில் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பாங்குளிடிங் ஹாலை ராஜாஜி ஹால் என்றும் ஆரன்மூர் அரண்மனையைத் தமிழகம் என்றும் இந்த அரசாங்கம் மாற்றி இருக்கையில் கார்ப்பரேஷன் இந்நகரில் உள்ள பெயர்களை மாற்றவேண்டும் என்று யோசனை தெரிவித்தபோது, அதில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாவின் பெயர் இருந்த காரணத்தினாலேயே அதைத் திரும்பவும் யோசனை செய்யுங்கள் என்று அரசாங்கம் திருப்பி அனுப்பிவிட்டார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தப் பதினேழு பெயர்களில் அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரே இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : மைலாப்பூரில் உள்ள எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டுக்கு நமது குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரை வைக்கவேண்டும் என்றும், நகரசபைக்கு லட்சம் ரூபாய் வழங்கிய சிவாஜி கணேசன் பெயரை பெசன்ட் ரோடுக்குச் சூட்டவேண்டும் என்றும் இது போல நல்லது செய்கின்றவர்களுடைய பெயரை நம் நகர வீதிகளுக்குச் சூட்டவேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டது. இப்படி நல்லவர்களுடைய பெயரை நிரந்தரமாக விளங்கும்படி சூட்டுவது நல்லது அல்லவா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கூறிய பெயர்கள் இந்த 17 பெயர்களில் வரவில்லை. இது விஷயம் கார்ப்பரேஷனிடம் இருந்து தகவல் வந்தவுடன் முடிவு செய்யப்படும்.

கனம் சபாநாயகர் : நம் நகரத்தில் எத்தனை ரோடுகள் இருக்கின்றனவோ அத்தனை நல்லவர்கள்தான் இருக்கிறார்களா ?

பாடப் புத்தகங்கள்

* 452 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

பள்ளிக்கூட பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு சீக்கிரமாக கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A list of approved books is published every year in the *Fort St. George Gazette*. At the time of publication of the list, the concerned publishers are requested to supply in time sufficient number of copies of the books and also to have on stock a sufficient number of copies.